மே - 2011

திருவள்ளுவர் ஆண்டு 2042

செந்தமிழ்

தொகுதி : 55
பகுதி : 7

விலை ரூ. 10/-

திங்கள் இதழ்

மதுரைத் தமிழ்ச் சங்கம் 14-09-1901 THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

செந்தமிழ்

(தோற்றம் 1903)

தொகுதி : 55
பகுதி : 7
மே 2011

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு 2042

வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867-02.12.1911

இதழ்க் கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	ரூ. 100	ரூ. 600
ஆயுள் கட்டணம்	ரூ. 1000	
புரவலர் கட்டணம்	ரூ. 5000	ரூ. 6000
தனி இதழ்க் கட்டணம்	ரூ. 10	

முகவை மன்னர் நா. குமரன் சேதுபதி
தலைவர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்.

ஆசிரியர்
இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை.

பொருளடக்கம்

திருமந்திரத்தில் சூட்சும இரகசியம்	*ப. ஜெயந்தி*	4
திருவருட்பாவில் உவமைகள்	*கி. சங்கர்தேவி*	9
தொல்காப்பியம் சுட்டும் அரசியல் நிலை	*க. முருகேசன்*	15
சேனாவரையர், கல்லாடனாரின் உரைகளில் புலப்பாட்டு நெறி - ஒப்பீடு	*கா. செல்வி*	19
அகநானூற்றில் ஆறுகளும் ஊர்களும்	*முனைவர் அ. ஜம்புலிங்கம்*	26
திருக்குறளில் ஆமை	*ஆறுவிரல் ஐம்பொறி*	33
மதுரை செந்தமிழ்க் கல்லூரி முப்பெரும் விழா, வாழ்த்துப் பா	*கூலவாணிகர் இரா.சொ. இராமசாமி*	36
இளைஞர்களே விழிமின்	*கவிவேந்தர் கா. வேழவேந்தன்*	38

இதழ் மணம்

அன்புடையீர்,

செந்தமிழ் வாசகர்களுக்கு வணக்கம்.

"திருமந்திரம்" ஒரு வாழ்வியல் நூல் என நிறுவுவதில் ம. ஜெயந்தி அவர்கள் வெற்றி பெற்றுள்ளார். இதில் கூறப்பெற்றுள்ள "சூட்சும இரகசியங்களை" அறிந்து கொள்வது இன்றைய ஆன்மீக வாழ்வியலுக்கு அவசியமாகிறது.

ஊன்கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிப்பதாகிய திருவருட்பா உவமைகளை சி. சங்கதேவி அவர்கள் வகைப்படுத்தியுள்ள விதம் பாராட்டிற்குரியது. கந்தவேலின் திருவருளை மக்களுக்கு வேண்டிய அருளுரையோடு ராமலிங்க வள்ளலார் வழங்கியிருப்பது இக்கட்டுரையைச் சிறப்பிற்குள்ளாக்குகிறது.

திரு. க. முருகேசன் அவர்கள் தொல்காப்பியர் சுட்டும் அரசியல் நிலையைப் படை, கொடி, குடை, முரசு என வகைப்படுத்தி பண்டைய தமிழர்களின் அரசியல் வாழ்வியலை வெளிப்படுத்தியுள்ள விதம் வியக்க வைக்கிறது.

சிவகாசியைச் சார்ந்த கா. செல்வி அவர்கள் சேனாவரையரின் பொருள் புலப்படுத்தும் மொழிநடையினைக் கல்லாடனாரின் மொழிநடையோடு ஒப்பிட்டுத் தந்து, இருவரின் உரையிலும் உள்ள வடசொற்களையும் சுட்டிச் செல்கிறார்.

முனைவர் அ. ஜம்புலிங்கம் அவர்கள் அகநானூற்றில் காணப்படும் ஆறுகளையும், ஊர்களையும் தம் ஆய்வுத்திறத்தால் வெளிப்படுத்தியுள்ளமை பாராட்டிற்குரியது.

ஆறுவிரல் ஐம்பொறி அவர்கள் திருக்குறள் கடலில் 108 ஆமைகள் வாழ்கின்றன என்பதையும், தன் புலமைத்திறத்தால் எவ்வெவ் அதிகாரத்தில் எத்தனை ஆமைகள் இருக்கின்றன என்பதையும் பட்டியலிட்டுக் காட்டியுள்ளவிதம் பாராட்டிற்குரியது.

தமிழ்நாடு தமிழ்ச்சங்கங்களின் கூட்டமைப்பு பொதுச் செயலர் கோவை கூலவாணிகரின் கவிதையும், கவிவேந்தர் கா. வேழவேந்தன் அவர்களின் இளைஞர்கட்கான எழுச்சியூட்டும் கவிதையும் இவ் இதழில் இடம்பெற்று, தங்கள் - கைகளில் தவழவிடுவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

முனைவர் க. சின்னப்பா

இனி நீங்களும் இதழும்....

திருமந்திரத்தில் சூட்சும இரகசியம்

ப. ஜெயந்தி
அண்ணாமலை நகர்

முன்னுரை

சைவ சமயத்தின் அடித்தளமாக விளங்குபவை திருமுறைகளும் ஆகமங்களும், பன்னிரண்டு திருமுறைகளில் பத்தாம் திருமுறையாகப் போற்றப்படுவது திருமந்திரம். பிற திருமுறைகளெல்லாம் பக்தியின் மிகுதியால் உதித்தவை. ஈசனின் பெருமைகளையே பாடுபொருளாகக் கொண்டவை; ஆனால் திருமந்திரம் மட்டுமே விதிவிலக்கு. பக்தியின் மேன்மையும், ஈசனின் பெருமைகளையும் திருமந்திரம் கூறினாலும், அது ஒரு வாழ்வியல் நூல் என்று கூறுவதே பொருத்தமாக இருக்கும்.

யோகப் பயிற்சிக்கான வழிமுறைகள், உடலிலுள்ள சக்கரங்கள், அவற்றின் இயக்கங்கள், நாடிகள், தச வாயுக்கள், பஞ்ச பூதங்கள், சித்திகள் எனப் பல சூட்சும இரகசியங்களைப்பற்றிக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கரு உற்பத்தி

தாயின் கருப்பையில் கரு உண்டாகும் தன்மைகளையும், பிறப்பினால் உடல்களுக்கு ஏற்படும் வேறுபாடுகளுக்கான காரணங்களையும், இறைவன் சீவர்களை கருப்பையில் இருந்து காக்கும் முறைமையையும் இப்பகுதியில் விளக்குகின்றார் திருமூலர்.

உயிர் என்பது என்ன? ஒரு கருவில் எவ்வாறு உயிர் உள்ளே நுழைந்து அதை இயக்குகிறது என்பதைத் திருமூலர் மிக அழகாக விளக்குகிறார். ‘கருப்பக்கிரியை’ என்ற தலைப்பின் கீழ் வரும் முதல் பாடலைக் காணலாம்.

''ஆக்குகின்றான் முன் பிரிந்த இருபத்தஞ்சு
ஆக்குகின்றான் அவன் ஆதி என் ஆருயிர்
ஆக்குகின்றான் அவன் கருக்கோளகை உள்ளிருந்து இருந்து
ஆக்குகின்றான் அவன் ஆவது அறிந்தே''

(திருமந்திர பாடல் எண் - 436)

முற்பிறவியில் உடலை விட்டு உயிர் பிரிந்த காலத்து அகன்று போன இருபத்தைந்து தத்தவங்களான பூதம் ஐந்தும், ஞானேந்திரியம் ஐந்தும், கன்மேந்திரியம் ஐந்தும், அந்தக் கரணம் நான்கும், புருடன் ஒன்றும் ஆகிய இவைகளை, உயிர் மீண்டும் பிறப்பெடுக்கும் போது அதனோடு பொருந்தச்செய்கின்றான். இவைகள் அனைத்துக்கும் ஆதியாக விளங்குகின்ற இறைவன் அருமையான உயிரைத் தத்துவங்களோடு சேர்ப்பித்து அவனே தாயின் கருப்பையில் பொருந்தியிருந்து உயிர்களுக்கு உதவுவதோடு உடல் வளர்ச்சிக்குத் தேவையானவற்றையும் செய்கின்றான். அவை,

இருபத்தைந்து தத்துவங்கள்

பொறிகள் ஐந்து
புலன்கள் ஐந்து
பூதங்கள் ஐந்து
கன்மேந்தி யங்கள் ஐந்து
மனம்
புத்தி
சித்தம்
அகங்காரம்
ஆன்மா

என மொத்தம் இருபத்தைந்து. மரணம் நிகழும்போது இந்த இருபத்தைந்துமே உடலிலிருந்து வெளியேறுகின்றன. பருவுடல் அப்படியே இருந்தாலும் இவை வெளியேறிவிடும்போது உடல் உயிரற்ற சடலமாகிவிடுகிறது.

உயிரின் உருவாக்கம்

இறப்பின் போது உடலிலிருந்து பிரிந்து சென்ற 25 தத்துவங்களும் மீண்டும் ஒன்றாக இணைந்து புதுப்பிறவி உண்டாகிறது என்று கூறும் திருமந்திரப் பாடலில் கண்டோம். இனி புதிய உயிரின் உருவாக்கம், வளர்ச்சி ஆகியன குறித்துத் திருமூலர் இப்பாடல் வரிகள் கூறுகிறார்.

'கருவை ஒழிந்தவர் கண்ட நால் மூ ஏழ்
புருடன் உடலில் பொருந்தும், மற்று ஓரார்;
திருவின் கருக்குழி தேடிப் புகுந்து அங்கு
உருவம் இரண்டாக ஓடி விழுந்ததே'

(திருமந்திரம் பாடல் எண் - 439)

பிறவி எனும் பெருஞ் சுமையை வென்ற ஞானிகள் தங்கம் ஞானத்தால் உணர்ந்து கொண்ட 25 தத்துவங்களும் (நால் மூ ஏழ் 4+3X7 = 25) மீண்டும் இணைந்து ஒரு கருவினை உருவாக்குகிறது.

இவ்வாறு 25 தத்துவங்களும் இணைந்த ஆணின் விந்து பெண்ணின் (திருவின்) கருப்பையைத் தேடிச் சென்று புகும்; அங்கே அது ஆண்-பெண் என இரு உருவாக இருக்கும்.

இந்த அடிப்படையில் பார்க்கும் போது கருமுட்டை அசைவற்றது; தானே நகரும் திறன் இல்லாதது. விந்தணுக்கள் தானே நகரும் திறன் கொண்டவை. 'உருவம் இரண்டு' என்பதற்கு ஆண்-பெண் என இரண்டு உருவங்களாக என்பதே பொருள் என்று திருமூலர் எவ்வளவு பெரிய சூட்சும இரகசியத்த்தை அறிவியல் உண்மையை ஒரு அடியில் பாடி வைத்துள்ளார் என்பதை அறிய முடிகிறது.

நவீன மருத்துவ அறிவியலில், நவீன உருப்பெருக்கிக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்ட மரபியலின் வயது சுமார் 100 முதல் 150 வருடங்கள் தான்!

ஆனால் கி.பி. 5- ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருமூலருக்கு இந்த ஆழமான விஞ்ஞான உண்மைகளை அறிவதற்குக் கருவியாக இருந்தது அவரின் மெய்ஞ்ஞானத்தாலே என்பது நூறு சதவிகிதம் உண்மை என்பது நவீன விஞ்ஞானத்தாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

மரபியலின் தந்தை மண்டெல் 120 ஆண்டுகளுக்கு முன் கண்டுபிடித்ததை நமது திருமூலர் 1600 ஆண்டுகளுக்கு முன்னரே விளக்கமாகக் கூறுயுள்ளார்.

கருவின் வளர்ச்சி

ஒரு கரு உருவான உடனேயே அதில் உயிர் வந்து விடுவதில்லை. பிராண சக்தியும், மறுபிறவி எடுக்கும் ஒரு ஆன்மாகவும் அந்த கருப்பிண்டத்தின் உள்ளே நுழையும் போதுதான் அது செல்களின் குவியல் என்ற நிலையிலிருந்து உயர்ந்து உயிருள்ள ஒரு கருவாக உருவம் பெறுகிறது.

அதுவரையில் நம் உடலிலுள்ள பல தசைகளைப் போன்றே அந்தக் கருவுள்ள முட்டையும் ஒரு தசை போன்றே கருதப்படும். பிராணன் எனும் மூச்சுக்காற்று (உயிர்க்காற்று) கருவினுள்ளே நுழைவது குறித்துக் கீழுள்ள திருமந்திரப் பாடல் குறிப்பிடுகிறது.

'பூவின் மணத்தைப் பொருந்திய வாயுவுந்
தாவி உலகில் தரிப்பித்த வாறுபோல்
மேவிய சீவனில் மெல்லநீள் வாயுவுங்
கூவி அவிழுங் குறிக்கொண்ட போதே.

(திருமந்திரம் பாடல் எண் - 441)

தாயின் கருப்பையினுள்ள இருக்கும் சிறிய கருவிற் உயிருட்டுகின்ற மூச்சுக்காற்றானது, குறிப்பிட்ட காலம் வரும்போது ஒரு மெல்லிய ஒலியோடு அந்த கருவின் உள்ளே புகும் என்பது இப்பாடலின் பொருளாகும்.

இதனையே உவமையாகத் திருமூலர் பூவின் நறுமணத்தைக் குறிப்பிடுகிறார். ஒரு பூ மலரும் போது அதிலிருந்து வரும் நறுமணம் காற்றோடு சேர்ந்து அந்தப் பகுதி முழுவதும் பரவி நிற்பதைப் போன்று, பிராணன் எனும் மூச்சுக்காற்றும் கருவின் உள்ளே நுழைந்து பரவி நிற்கும் என்பதாகும்.

மேலும் ஒரு பாடலில்,

'போகின்ற எட்டும் புகுகின்ற பத்தெட்டும்
மூழ்கின்ற முத்தனும் ஒன்பது வாங்குதலும்
நாகமும் எட்டுடன் நாலு புரவியும்
பாகன் விடாவிடின் பன்றியும் ஆமே'

(திருமந்திர பாடல் எண். 266)

இந்த மூச்சுக்காற்று சரியான வேளையில் உள்ளே நுழைந்து கருவுக்கு உயிரூட்டினால் மட்டுமே, அந்தக் கரு முறையாக வளர்ந்து ஒரு குழந்தையாக உருமாற முடியும். மூச்சுக்காற்று உள்ளே நுழைவதில் தாமதங்கள் அல்லது தடைகள் ஏற்பட்டாலோ அல்லது உள்ளே நுழைந்த மூச்சுக்காற்றின் இயக்கங்கள் சரிவர இல்லாது போனாலோ கருவின் வளர்ச்சி பாதிக்கப்படும். கருச்சிதையும் ஏற்படலாம் என்ற செய்தியினைத் திருமூலர் திருமந்திரப் பாடலின் மூலம் தெரிவிக்கின்றார்.

முடிவுரை

சைவநெறியைத் திருமந்திரம் சிறப்பாகச் குறிப்பிடுகிறது. திருமந்திரம் பக்தியின் மேன்மையையும், ஈசனின் பெருமைகளையும் கூறினாலும், அது ஒரு வாழ்வியல் நூல் என்று கூறுவதே பொருந்தும் என்ற உண்மை விளக்கப்பட்டு உள்ளது.

உயிர் என்பது என்ன? கரு கருவில் எவ்வாறு உயிர் உள்ளே நுழைந்து அதை இயக்குகிறது என்ற செய்தியை மிக அழகாக நிறுவப்பட்டு உள்ளது.

திருவருட்பாவில் உவமைகள்

கி. சங்கர்தேவி
அண்ணாமலைநகர்

முன்னுரை

ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்னும் உறுதியுடையராய் எவ்வுயிர்க்கும் நன்றேபுரியும் செந்தமிழ்நாட்டுச் சான்றோர் திருக்கூட்டத்தில் வாழையடி வாழையெனத் தோன்றிய இராமலிங்க வள்ளலார் திருவாய்மலர்ந்தருளிய செந்தமிழ்த் திருப்பாடற் தொகுதியே திருவருட்பாவாகும். இத்திருப்பாடல்கள் அருளாளனாகிய இறைவன் உயிர்களிடத்தே வைத்துள்ள திருவருளின் திறத்தைப் போற்றிப் பரவும் நிலையில் திருவருளின் தூண்டுதலாற் பாடப்பெற்ற திருப்பாடல்களாதலின் திருவருட்பா என வழங்கப்படுகின்றன.

திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்கர் பாடியருளிய திருவருட்பாத்திருப்பாடல்கள் ஆறுதிருமுறைகளாக வகுக்கப்பெற்றுள்ளன. அவற்றில் அமைந்த திருப்பாடல்களின் தொகை 5818 ஆகும். இவையன்றி அடிகளார் தன் நண்பர்களுக்கு கடிதமாகவும் சிறப்பு பாயிரமாகவும் எழுதிய தனிப்பாடல்களும் பலவுள்ளன. எல்லாம் வல்ல அருட்பெருஞ்சோதி ஆண்டவனை நோக்கி உலகமக்கள் அனைவரும் நாள்தோறும் வேண்டிப் போற்றும் நிலையில் உரைநடை வேண்டுகோளாக அமைந்தவை சுத்தசன்மார்க்கச் சத்திய சிறுவிண்ணப்பம், பெருவிண்ணப்பம், ஞானவிண்ணப்பம், சங்க சத்திய ஞான விண்ணப்பம் என்பனவாகும். மனுமுறை கண்டவாசகம், ஜீவகாருண்ய ஒழுக்கம் என்பன அடிகளார் இயற்றிய உரைநடை நூல்கள் இவ்வாறு இராமலிங்க அடிகளார் தம் உரைத்திறத்தாலும் பாட்டின் திறத்தாலும் தமிழுக்குச் செய்த அரும்பணிகள் குறிப்பிடத்தக்கனவாக உள்ளன.

கற்போர் நெஞ்சத்தினைக் கருணைத்திறம் வாய்ந்ததாகக் கனிவிக்கும் அன்பின் திறமும் பொருந்திய தம்முடைய பாட்டின் திறத்தாலே இறைவனது திருவருளொளியைப் பரப்புவதற்கு ஒருவகை உத்தியாக உவமையைக் கையாள்கிறார். அவர் உவமையைக் கையாளும் திறத்தினை இக்கட்டுரை காணமுற்படுகிறது.

உவமைப் பண்புகள்

உவமை என்பது பொருளைத் தக்க ஒப்புமை கொண்டு உணர்த்தி அதன் தன்மையைப் புலப்படுத்தவதாகும். வினை, பயன், மெய்,உரு ஆகிய நான்கு வகைகளில் உவமைகள் தொல்காப்பியரால் பகுத்துச் சொல்லப்பட்டுள்ளன.

''வினைபயன் மெய்உரு என்ற நான்கே
வகைபெற வந்த உவமைத் தோற்றம்'' (தொல். சூ. 272)

''புலிபோலப்பாய்ந்தான்'' என்பது வினை. ''மாரியன்ன வண்கை'' என்பது பயன், 'துடிபோலும் இடை' என்பது வடிவு, 'தளிர் போலும் மேனி' என்பது நிறம் இவ்எடுத்துக்காட்டுகளால் நால்வகை உவமைகள் விளக்கப்படுகின்றன. வினை, பயன், மெய், உரு ஆகிய நான்கினைப் பண்பு, தொழில், பயன் என மூன்றாக அடக்கிக் காட்டுவர் தண்டியலங்கார நூலாசிரியர்.

''பண்பும் தொழிலும் பயனுமென் றிவற்றின்
ஒன்றும் பலவும் பொருளொடு பொருள்புணர்ந்து
ஒப்புமை தோன்றச் செப்புவது உவமை''
(தண்டியலாங்கார சூத்திரம். 31)

வடிவையும் நிறத்தையும் பண்பு என்னும் பொதுச் சொல்லால் தண்டியலங்காரம் குறிப்பிடுகின்றது. எனவே உணர்வு மிக்க பாடல்களுக்கு உவமைகள் ஒளிவிளக்காக நின்று செய்யுட் செய்திகளை விளக்கப்படுத்துகின்றன. உணர்வுமிக்க திருவருட்பாப்பாடல்கள் இவ்விளக்கத்திற்கு விதிவிலக்கல்ல.

திருவருட்பாவில் உவமைகள்

திருவருட்பாவில் அமைந்துள்ள உவமைகள் பெரும்பாலும் இறையருள் நோக்கியதாகவும், இறைத்திறம் பற்றியதாகவும் ஆன்ம ஈடேற்றத்திற்குரியதாகவும் அமைந்துள்ளன.

''மருஓங்கு செங்கமல மலர்ஓங்கு வணம்ஓங்க
வளர்கருணை மயம்ஓங்கி ஓர்
வரம்ஓங்கு தெள்ளமுத வயம்ஓங்கி ஆனந்த
வடிவாகி ஓங்கி ஞான''

நறுமணம்மிக்க செந்தாமரைமலரின் நிறத்துடன் நிறைவான திருவருளே வடிவமாகவும், சிறந்த தவத்தின் பயனாகக் கிடைக்கும் தெளிந்த அமுதம் போல இனிமைமிக்க பேரானந்ததுடன் பூரண மெய்ஞ்ஞானம், பேரழகு, பேரறிவு, பேரொளி இவற்றின் வடிவமாகவும் இறைவன் இருக்கிறான் என்று இங்கு செந்தாமரை மலரும் அமுதமும் உவமையாகச் சொல்லப்பட்டுள்ளன.

செந்தாமரை மலர், வண்ண உவமையாகக்கப்பட்டுள்ளது இறைவன் செந்நிறமேனியன், அதே போழ்து தண்ணியன்; அழகானவன்; எனவே தான் தண்ணீரில் இருக்கும் செந்தாமரையை மிகப்பொருத்தமாக உவமையாக்கியுள்ளார்.

அமிழ்தம் தவத்தின் பயனாகப் பெறுவது; அன்பர்க்கு எளியவன் இறைவன்; அல்லாதார்க்கு அரியவன்; பூரண மெய்ஞ்ஞானமாக இருக்கும் இறைவன் அமுதம் போன்றவன் என சுவை கூட்டி உரைக்கின்றார்.

வடிவ உவமை

பிணங்கும் மனத்தின் செயலைத் தெரிவித்து இணங்குதற்குதவுமாறு இறைவனிடம் வேண்டுகிறார்.

துடிஎன்னும் இடைஅனம் பிடிஎன்றும் நடைமுகில்
துணைஎனும் பிணையல் அளகம்
சூதென்னும் முலைசெழுந் தாதென்னும் அலைபுனல்
சுழிஎன்ன மொழிசெய் உந்தி

உடுக்கையின் நடுப்பகுதி போன்ற மெல்லிய இடை அன்னத்தையும், பெண்யானையினையினையும் ஒத்த நடையும், கருமுகிலையொத்த மலர்சூட்டிய கூந்தல் சூதாடு கருவியினையும், செழுமையான தாமரை மலர் மொட்டினையும் போன்ற நகில்கள் அலைகலுள்ள நீரில் சுழித்துக்கொண்டு செல்லும் நீர்ச்சுழி போன்ற கொப்பூழ், கூர்மையான வேல் போன்ற விழிகள், முழுமதியனை ஒத்த முகம் என்று பெண்களின் அவயங்களை வருணித்துக் கூறிவரும் என் மனம் இக்காமக் கலையினைக் கற்றுக் கொள்ள ! என்று கூறுகின்றதே; என் மனத்தை மாற்றியருள்க! என்கிறார்.

கேவலசகல அவத்தையுறாமல் சுத்தாவத்தையுற்று சிவபோகப் பெருவாழ்வு நல்குமாறு முருகப்பெருமானை வேண்டுகிறார்.

அலை இலாச் சிவஞான வாரியே ஆனந்த அமுதமே குமுத மலர்வாய் அணிகொள் பொற்கொடிபசுங் கொடிஇரு புறம்படர்த் தழகுபெற வருபொன் மலையே அலைகளின்றி அமைதியுடன் விளங்கும் சிவஞானமாகிய கடலே! பேரின்பமயமான அமுதமே! குமுதமலர் போன்ற வாயினையுடைய அழகிய பொற்பொடியாம் தெய்வானையம்மையாரும், பசுங்கொடி யென விளங்கும் வள்ளிநாச்சியாரும் இருபுறமும் தழுவிக் கொண்டுள்ளநிலையில், அழகு மிக்க பொன்மலையெனக் காட்சியளிப்பவரே! என்று நல்வாழ்வு வேண்டி இறைவனிடம் குறையிரக்கின்றார்.

பிரமவாதிகளின் புன்மைகூறி அவர்கள் புன்மைநெறிகைவிடார் எனக் கட்டுரைக்கின்றார்.

சாம்பிரமமாம் இவர்கள் தாம்பிரமம் எனும்அறிவு
தாம்புபாம் பெனும் அறிவு காண்
சத்துவ அகண்டபரி பூரணாகாரஉப
சாந்தசிவ சிற்பிரமம்நீ

பொய்வேதாந்தம் பேசி நாட்களை வீணாகக் கழிப்பவர்கள் தம்மிடம் மெய்யறிவு பெற வருபவர்களுக்கு உபதேசித்து தாம் எல்லாம் உணர்ந்தவர் என்பர். ஆனால், அவரே தமக்கு ஓர் இடையூறு நேர்ந்திடின்

தாம் இதுகாறும் பேசிவந்த பிரம்ம நிலையினை அடியுடன் விட்டுவிடுவார்கள்! வாழ்க்கை முடிந்து, ஒருநாள் மரணமுற்று மறைய வேண்டிய இவர்கள் தம்மைப்பிரமம் எனக் கூறிக் கொள்வது கயிற்றினைப் பாம்பெனத் தவறாக அறியும் பொய்யறிவாகும்.

பண்பு உவமை

ஒருமை நினைவுடைய உத்தமர் உறவு முதல் நோயற்ற வாழ்வு ஈறாகவுள்ள நலம் பலவும் வேண்டுமென முறையிடுகின்றார்.

ஒருமையுடன் நினதுதிருமலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவுகல வாமை வேண்டும்

தியானகாலத்தில் உள்ளத்தைப் புறத்தே அலையவிடாது ஒரே மனத்துடன் தியானித்தல் இன்றியமையாதது அவர்களே ஆன்மீகத்துறையில் முன்னேறுவர். எனவே, அத்தகைய நல்ல அடியவர்களின் நட்பினையே வேண்டுகிறார். பெருமான் திருவடிகளை மலரடி எனக் கூறுகின்றார். அருணகிரிநாதரும் இறைவன் தாள்களை ''திணியான மனோசிலை மீதுனதாள் அணியார் அரவிந்தம் அரும்புமதோ'' என்று கந்தர் அநுபூதியில் கூறியுள்ளார். (க. அநுபூதி. 5)

பயன் உவமை

ஒழுக்கமுடைய நல்லோர் உறவே பெற அருளுமாறு வேண்டிக்கொள்கிறார்.

கரையில் வீண்கதையொ முதிர்கருங் காக்கைபோல்
கதறுவார் கள்ளுண் டதீக்
கந்தம் நாறிட ஊத்தை காதம் நாறிடஉறு
கடும்பொய் இருகாதம் நாற

சாகின்ற கிழக்கருங்காக்கை முடிவில்லாது கத்துவது போல், வீண்கதைகளையெல்லாம் பேசும் வீணரும், கள்ளுண்ட வாயின்

முடைநாற்றமும், வாய் அழுக்கு நாற்றமும் ஒருகாத தூரம் நாறும்படியாகவும், பேசும் கடும்பொய்யுரைகள் இரு காதம் வரை கேட்குமாறு நெறியற்ற முறையில் பேசித் தர்க்கமிடுபவரும், சிவமணங்கமழும் இறைவன் பெருமையைப் பேசும் மலர்போன்ற பொன் வாயினைப் பெற்ற அடியார்களுடன் பேச நேரிடின், வாய்மூடி மௌனியாவர் இத்தகையவர்களை,

"பயனில் சொல்பாராட்டுவானை மகன் எனல்
மக்கட் பதடிஎனல்" (குறள் 196)

என வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். இத்தகையவர்களுடன் சேராமல் உன் புகழ் போற்றிப் பரவுகின்ற அடியார்களுடன் சேர்ந்து நட்புகொள்ள அருள்புரிய வேண்டுகின்றார்.

முடிவுரை

திருவருட்பாவில் கந்தவேளின் திருவருளை இராமலிங்க வள்ளலார் வேண்டியதுடன், மக்களுக்கு அளுருரையும், பல அறிவுரைகளும் வழங்கியுள்ளார். இவை அனைத்தும் தேன் போன்று இனிப்பவை; இவற்றில் இயல்பான கருத்துக்களோடு, எதார்த்தமாக, மிக எளிமையான உவமைப்பொருள்களைக் காட்டித் தெளிவாக விளக்கியுள்ளார். உவமைகள் உணர்வுகளை உள்ளவாறு வெளிப்படுத்தும் இயல்பின என்பதை இவர்தம் அருட்பாக்களின் பல அடிகளில் காணமுடியும். உவமைகள் கருத்துக்களை எளிமையாக மக்கள் மனதில் பதிய வைக்கும் திறம் உடையவை; அருட்பா தெய்வ நம்பிக்கையை ஊட்டும் பக்தி இலக்கியமாக மட்டுமல்லாமல் சமுதாய நலம் கருதும் மக்கள் இலக்கியமாகவும் இருப்பதால் உவமைகள் சிறப்பாகக் கையாளப்பட வேண்டிய தேவையும் வள்ளலாருக்கு இருந்திருக்கிறது. என எண்ண இடந்தருகிறது.

தொல்காப்பியம் சுட்டும் அரசியல் நிலை

க. முருகேசன்
தஞ்சாவூர் மாவட்டம்

இலக்கண செறிவும் இலக்கிய வளமும் சான்று இன்று வரை நடைமுறையில் இலங்கி வரும் தொன்மை வாய்ந்த மொழி தமிழ் மொழியாகும். அத்தகைய சீர்சால் தமிழ்மொழியின் பழைமையான இலக்கண நூல்களுள் ஒன்றான தொல்காப்பியம் காட்டும் அரசியல் நிலையினை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பழந்தமிழகம்

பழந்தமிழகத்தைக் கி.மு.1465லிருந்து மூன்று வேந்தர்கள் ஆண்டு வந்தனர். தமிழகத்தின் எல்லையைச் சிறப்புப்பாயிரம் பாடிய ''பனம் பாரனார்''

வடவேங்கடம் தென்குமரி

ஆயிடைத்

தமிழ் கூறும் நல்லுலகத்து[1]

என்கிறார். ''மூந்நீர் வழக்கம்'' என்று தொல்காப்பியம் கூறுவதால் மூன்று பக்கம் கடல் சூழ்ந்த இடம் என்று உணரற்பாலது. மேலோர்களாகிய மூவேந்தர்களைப் பின்னர் வந்த இலக்கியங்கள் மூலமாகச் சேரர், சோழர், பாண்டியர் என்று அறிகிறோம். மூவரில் ஒருவருக்கொருவர் பகைமைப் பாராட்டிப்போர் புரியும்போது, அடையாளத்துக்காக 'பனங்குறுத்து', 'ஆத்திமாலை', 'வேப்பமாலை' அணிந்த வருவர். இதனை,

வேந்திடை தெரிதல் வேண்டிஏந்து புகழ்ப்

போந்தை வேம்பே ஆர்என் வருஉம்

மாபெருந் தானையர் மலைந்த பூவும்[2]

என்ற நூற்பா வடிவில் அடையாளப்படுத்தகிறார். மேலும் நாட்டுச் சின்னங்கள் அப்போது அமைக்கப்படவில்லை.

அரசர்க்கு உரியவை

படையும் கொடியும் குடையும் முரசும்
நடைநவில் புரவியும் களிறும் தேரும்
தாரும் முடியும் நேர்வன பிறவும்
தெரிவுகொள் செங்கோல் அரசர்க்கு உரிய

என நால் வகைப் படையும் தனக்கென ஒரு கொடியும், வெண் கொற்றக் குடையும், முரசும், குதிரையும், யானையும், தேரும், தனக்கென ஒரு மாலையும், தலையில் அணியும் முடியும், பிறவும் செங்கோல் அரசர்க்கு உரியவையாக தொல்காப்பியர் வரையறுக்கிறார்.

காவல்-பொருள் வயிற் பிரிவு

சிறப்புமிக்க தெய்வவழிபாடு விழாக்கள் நன்கு நடைபெறவும், முல்லை முதல் எல்லா நிலங்களிலும் பிழைபடச் செயல்கள் நடவாமை வேண்டியும், நாட்டின் நல்ல பல செயல்பாடுகள் சரிவர முடியவும், வேந்தன் தகுந்த மக்களைப் பிரித்துக் காவல் பணிக்கு அனுப்புகிறான். இதனை,

மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய
முல்லை முதலாச் சொல்லிய முறையான்
பிழைத்தது பிழையா தாகல் வேண்டியும்
இழைத்த ஒண்பொருள் முடியவும் பிரிவே

என்கிறார். மேலும்,

மேலோர் முறைமை நால்வர்க்கும் உரித்தே

என்று வேந்தன் ஏவுதற்குக் காவல் பிரிவு அரசியலாளர்கள் முதலான நால் வகையோடும் உட்பட்டவர்களே. செய்தொழில் முறையான் இந்நால்வகை காட்டப்படுகிறது.

பங்கீடு

வேந்தர்கள் மக்களுக்கும், நாட்டிற்கும் ஒரு பெரிய காவலர் போலவே பணியாற்றுகிறார்கள். தமிழக மன்னர்களுக்குள் ஏதேனும் பிணக்கு நேர்ந்தால், முறைப்படி ஆநிரை கவர்தல் செய்கிறார்கள். நோயின்றிக் கொண்டு வந்தவைகளைப் பங்கு வைத்தல், தானமாகக்

கொடுத்தல் போன்றன நிகழ்கிறது. இதனை,

நோயின்றி உய்த்தல் நுவல்வழித் தோற்றம்
தந்துநிறை, பாதீடு உண்டாட்டு கொடையென
வந்த ஈரேழ் வகையிற்றாகும்

எனக் கிடைக்கும் செல்வம் பங்கிடப்படுவதால், பெருஞ்செல்வம் அரசனுக்குச் சேராது போகிறது. செல்வப் பெருமக்கள் அடிமைகள் என்ற பெரும் பிரிவு தமிழகத்தில் கிடையாது. வீரத்தின் விளைவாலான வெற்றியே கொண்டாடப் பெறுகிறது. ஒருவர் நாட்டை மற்றவர் கவர்ந்த கொள்வதில்லை. எப்போதுமே மூவர் தண்பொழில் நிலவுகிறது.

வீரச்செயல்

புறத்திணையியலில் பல்வேறு திணை வழி நடைபெறும் பேரும் போர்களில் வீரமுடன் எதிர்கொள்ளும் சண்டைகளின் மறச்செயல்களைப் பற்றித்தான் கூறப்படுகிறது. இதனை,

எஞ்சா மண்நசை வேந்தனை வேந்தன்
அஞ்சுதத் தலைச்சென்று அடல்குறித் தன்றே

என்கிறார். மேலும், அதன் கண் எங்கும் அரசுச் சூழ்ச்சி முறைகள் என்று கிஞ்சித்தேனும் இல்லை. மேலும்,

வீரமறச் செயல்களுக்கு அடிப்படை நிலை, புறமுதுகிட ஓடாத, உடல் ஆற்றலும், மறவர் காணும் உன்ன மனநிலையுமாகும். பகைவரை மட்டொரு பொருளாகக் கருதாது பேராண்மையுடன் எதிர்ப்பதும்; பெரும்படையை அணைபோல ஒருவனே தாங்கும் பெருமையும்; அரசனைப் படைகள் மொய்த்த போது தனியாக முன்னணி சென்று வெல்லும் வேகமும்; அரசன் இருவர் போர் செய்யும்போது, ஒருவரோ, இருவருமேயோ வாள்புண் பெற்று அழியும் நிலையினும் யானையை எதிர்த்து ஏறும் பெருமையும்; பகைவர் நாணும்படித் தலைவரைக் குறித்து வஞ்சினம் கூறித் தம்முயிரைக் களப்பலியாக வழங்குவதும்; தகுதியுடன் வரும் சிறப்பு நோக்கித் தன் மறப்புண்ணைக் கிழித்த உயிர் துறப்பதவும்; இறந்த கணவன் இறந்த வேல்கொண்டு களம் வந்து கண்ட மனைவி தன்னையும் மாய்த்துக் கொள்ளுதலும்; சிறுவன் புறமுதுகிட்டான் எனக் கேட்டுத் தாய் வருந்துவதும் போன்றன மறச் செயல்களாம்.

பன்னிரு வேளிர்கள்

செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்
தம்குறிப் பினவே திசைச்சொல் கிளவி

வேளிர்கள் (குறுநில மன்னர்கள்) தமிழகத்தில் பன்னிருவர் உண்டு. வேந்தர்கள், தானைத் தலைவர்கள் போன்று இவர்களும் ஏவல்கள் விடுப்பவர்களே. இவர்கள் வேந்தர்களின் நாடு சார்ந்து வேந்தர்களுக்கு உட்பட்டவர்களே. வேளிர்களுக்கு வில், வேல், வீரக்கல், தலைக்கண்ணி, தார், ஆரம், தேர், வாள் இவை உரியவை என,

வில்லும் வேலும் கழலும் கண்ணியும்
தாரும் மாலையும் தேரும் வாளும்
மன்பெறு மரபின் ஏனோர்க்கு உரிய

என்கிறார். மேலும், வேளிர்கள் அளவுக்குச் செல்வமுடையோராயிரந்தாலும் வணிகர், வேளாளர் போன்றோருக்கு மேற்கூறியவை கிடையாது என்கிறார்.

முடிவுரை

பண்டைய தமிழர்கள் 3460 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழக வேந்தர்கள் அவர் தம்நாடுகளுக்கு வரைப்படம் வரைந்த பார்த்திருப்பது எண்ணி, எண்ணி வியக்கத்தக்கத. சோழனுக்காக, மலையமான் என்னும் வேளிர், வெளியிட்ட நாணயங்களின் முன்புறம், சோழ நாட்டின் சின்னமாக இதன் இயற்கை அமைப்புகளான (Land Marks) மேற்குத் தொடர்மலை, தென்பெண்ணையாறு, காவிரியாறு, நீலகிரி மலைமுகடு, சேரநாடு புகும் வழியாகப் பாலக்காடு கணவாய் இத்தனையும் வரைப்படமாகக் காட்டி வெளியிடப்பட்டுள்ளான். தற்காலப் புவியியல் படத்துடன் (Atlas) ஒப்பிட்டு பேருவகை எய்தும் நிலை பண்டைய அரசியலில் அமைந்திருந்ததை அறியலாம்.

அடிக்குறிப்புகள்

1. ச. வே. சுப்பிரமணியன், தமிழ் இலக்கண நூல்கள், ப. 17.
2. மேலது., ப. 55.
3. மேலது., ப. 80.
4. மேலது., ப. 53.
5. மேலது., ப. 53.
6. மேலது., ப. 54.
7. மேலது., ப. 55.
8. மேலது., ப. 49.
9. மேலது., ப. 80.

சேனாவரையர், கல்லாடனாரின் உரைகளில் புலப்பாட்டு நெறி - ஒப்பீடு

கா. செல்வி
சிவகாசி

எந்த உரைநூலும் சிறந்து விளங்குவதற்கு அதில் சொல்லாட்சி நன்கு அமைந்திருக்க வேண்டும். உரையில் பொருத்தமான, தெளிவான பொருள் தரக்கூடிய சொற்கள் இல்லையெனில் கற்போருக்கு இடர்ப்பாடு நேரிடும். உரையாசிரியர் தமது மொழிநடையினை வெளிப்படுத்தவும், மூலநூலின் பொருளைத் தெளிவாக உணர்த்தவும் சீரிய சொல்லாட்சியை மேற்கொள்ள வேண்டியவராகின்றார்.

ஒப்பீடு

இரு வகையான படைப்புகளை எடுத்துக் கொண்டு அப்படைப்புகளினிடையே காணப்படுகின்ற ஒற்றுமை வேற்றுமை பண்புகளை ஆய்வது ஒப்பீடாகும். இத்தகைய ஒப்பீட்டின் தோற்றம் ''உலகில் என்று மனிதன் எண்ணத் தொடங்கினானோ அன்றே ஒப்பிட்டு நோக்கும் முறையும் உடன் தோன்றியது எனலாம். ஒற்றுமைகளை ஒத்துக் காண்பதும், வேற்றுமைகளைப் பிரித்து அறிவதும் அவன்தன் இயற்கை ஆயிற்று'' என்பர். இவ்வாறு ஒப்பிட்டு நோக்கும் இரு படைப்புகள் ஒரே வகை இலக்கண இலக்கிய நூல்களை ''ஒன்றுபட்டும், வேறுபட்டும் அமைகிற பின்புலங்களிலிருந்து பார்க்கிறபோது, குறிப்பிட்ட இலக்கியத்தின் பண்புகளும் கூறுகளும் தெளிவாகவும் விளக்கமாகவும் காணக்கூடும். இந்தக் கருத்து நிலைகளே ஒப்பிட்டுத் திறனாய்வின் கருதுகோள்'' என்று நடராசன் குறிப்பிடுகின்றார். அக்கருதுகோளுக் கேற்றவாறு இலக்கண நூலான தொல்காப்பிய சொல்லதிகாரத்திற்கு உரை வழங்கிய சேனாவரையர், கல்லாடனார் ஆகிய இரு உரையாசிரியர்களின் உரைநூல்களிலிருந்த பொருளைப் புலப்படுத்தும்

முறைமையில் மொழி நடையின் சொற்கூறுகள் ஒன்றுபடுவதையும், வேறுபடுவதையும் ஒப்பிட்டு ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

அளபெடைச் சொற்கள்

சேனாவரையரும், கல்லாடனாரும் அளபெடைச் சொற்களைத் தங்கள் உரையில் பயன்படுத்தியுள்ளார். சேனாவரையர், தமது உரையில் அளபெடைச் சொற்களாக 'என்பதூஉம்', 'அல்லதூஉம்', 'மரீஇ', 'மரீஇய' என்பனவற்றைப் பயன்படுத்தியுள்ளார். அவற்றுள் 'என்பதூஉம்', 'அல்லதூஉம்' என்ற இன்னிசையளபெடைச் சொற்களைப் பெரும்பாலும் பயன்படுத்தியுள்ளார். கல்லாடனாரும் தமது உரையில் , 'என்பதூஉம்', 'அல்லதூஉம்', 'மரபுவழீஇ', 'வினைவேறுபடுஉம்' 'நிற்பதூஉம்' போன்ற அளபெடைச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளார்.

''மரபு வழீஇ யமையுமாறுணர்த்துதல் றுதலிற்று''

(கிளவி. நூ. 17, உரை. ப. 21)

''சில பொருளொழித்துச் சில பொருண்மேல்
'நிற்பதூஉம்' கொள்ளப்படும்''

(கிளவி. நூ. 53, உரை. ப. 47)

சேனாவரையர் 'என்பதூஉம்', 'அல்லதூஉம்' என்ற அளபெடைச் சொற்களை அதிகமாகப் பயன்படுத்தியுள்ளார். ஆனால் கல்லாடனார் என்பதூஉம் அல்லதூஉம் என்பதை அதிகமாகப் பயன்படுத்தவில்லை. எனினும் 'கிடந்ததூஉம்', 'உயிரல்லதூஉம்', 'உயிருடையதூஉம்', என்று சேனாவரையர் பயன்படுத்தாத அளபெடைச் சொற்களை கல்லாடனார் பயன்படுத்தியுள்ளார்.

வியங்கோள் வினைமுற்றுச் சொற்கள்

தொல்காப்பிய சொல்லதிகார உரையில், சேனாவரையரும், கல்லாடனாரும் வியங்கோள் வினைமுற்றுச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளனர். சேனாவரையர் வியங்கோள் வினைமுற்றுச் சொற்களான கொள்க, அறிக, உணர்க, என்க ஆகியவற்றை அதிகமான இடங்களில் பயன்படுத்தியுள்ளனர். ஆனால் கல்லாடனாரோ கொள்க,

உணர்க, அறிக, என்ற வியங்கோள் வினைமுற்றுச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளார்.

"இதனாற் கூறியது எண்ணின் கண் திணைபற்றியப் பிறக்கும் மரபுவழூஉ வமைதி என உணர்க"
(கிளகவி. நூ. 45, உரை. ப. 42)

"அவனல்லத என்புழி அல்லது என்பதனைப் பின் பிறன் இல்லை என்று வருவதனோடுபடுத்து வழுவாதால் அறிக"
(கிளவி. நூ. 57, உரை. ப. 36)

"தன்னினமுடித்தல் என்பதனான், வியங்கோளல்லாத விரவுவினைக் கண்ணுஞ்சிறுபான்மை வருவன கொள்க"
(கிளவி. நூ. 45, உரை. ப. 42)

சேனாவரையர் தம்துரையில் வியங்கோள் வினைமுற்றுச் சொற்களை அதிகமாகப் பயன்படுத்தியது போன்று கல்லாடனார் தமதுரையில் அதிகமாகப் பயன்படுத்தவில்லை.

வடமொழிச் சொற்கள்

தொல்காப்பிய சொல்லதிகார உரையில் வடமொழிச்சொற்களையும் கலந்து தந்துள்ளபோக்கு சேனாவரையர், கல்லாடனார் ஆகிய இரு உரையாசிரியர்களிடமும் காணப்படுகின்றது. சேனாவரையர் அநுவதாம், யோகவிபாகம், நேயம் போன்ற சொற்களைப் பயன்படுத்தியுள்ளார். கல்லாடனாரும் தமதுரையில் வடமொழிச் சொற்களாக, ஞாபகம், இலேசினான், விசேடித்து போன்றவற்றைப் பயன்படுத்தியுள்ளார்.

"விசேடவகையான் உருபிற்கு உரியதோர் இலக்கணமும், எல்லா உருபிற்கும் பொதுவாயதோர் இலக்கணமும் உணர்த்துதல் நுதலிற்று"
(வே. ம. நூ. 106, உரை. ப. 93)

"கிளவி யென்றதற்குப்பெயராற் பொருளினை ஆக்கமொடு புணர்ந்ததென்று விசேடித்துக் கூறினமையின் ஆக்கமல்லா ஏது ஒத்தகிழமைத்தன்று என்பது போலும் கருத்து"

(வே.ம. நூ. 94, உரை. ப. 86)

"ஞாபகத்தான் கொண்டது மரபு வழுவமைதி"

(கிளவி. நூ. 42, உரை. ப. 40)

"வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே"

என்பார் தொல்காப்பியர்.

இந்நூற்பாவிற்கிணங்க சேனாவரையர் தமதுரையில் 'நியமித்தவாறு', 'விசேடம்' போன்றவாறு வடமொழிச் சொல்லையும் தமிழ்ச் சொல்லையும் கலந்து பயன்படுத்தியுள்ளார். அதுபோல் கல்லாடனாரும் தொல்காப்பியர் சொல்லதிகாரத்திற்கு உரை கூறுகையில், வடமொழிக்கே உரிய சிறப்பெழுத்துக்களான ஷ,ஸ, ஆகியவற்றை நீக்கித் தமிழுக்கு உரிய எழுத்துக்களால் மாற்றியமைத்துள்ளார். எடுத்துக்காட்டான, 'விசேஷித்து' என்ற வடமொழிச் சொல்லையும், 'வகை' என்ற தமிழ்ச்சொல்லையும் இணைத்து 'விசேடவகையான்' என்று குறிப்பிட்டுள்ளார். அவ்இரு உரையாசிரியர்களும் தங்களுரையில் வடசொற்களைக் கலந்திருப்பது அவர்களுக்கு அவற்றின் மீதான பயிற்சியை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளன.

குறிப்பிடத்தக்க எதிர்மறைச் சொற்கள்

தொல்காப்பிய சொல்லதிகாரத்திற்கு சேனாவரையர், கல்லாடனார் ஆகியோர் உரை செய்கையில் சொற்றொடரில் குறிப்பிடத்தக்க எதிர்மறைச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளனர். சேனாவரையர் தமதுரையில் 'விளங்காமை', 'அல்லாக்கால்', ''முடியாமை', 'புலனாகாமை', 'கருத்தினனல்லன்', 'ஒழிந்த', 'கருத்தன்று' போன்ற எதிர்மறைச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளார். அதேபோன்று கல்லாடனாரும், எதிர்மறைச் சொற்களாக 'இன்மை', 'இல்லை',

'நில்லாமை', 'நில்லாது', 'அல்லதனை' 'ஒழிந்து', 'அறிந்திலம்' போன்றவற்றைப் பயன்படுத்தியுள்ளார்.

''பிறிது காரணம் உண்டாயினும் அறிந்திலம்''
(வினை. நூ. 222, உ.ப. 162)

''அவன் வினாவினை பொருட்டன்னைச் சொல்லுமிடத்துச் சுட்டி இல்லையென்று சொல்லு'' (கிளவி. நூ. 26, உரை. ப. 36)

விருப்பச் சொற்கள்

சேனாவரையர், கல்லாடனார் ஆகிய இரு உரையாசிரியர்களும் தங்களுரையில் விருப்பச் சொற்களை பயன்படுத்தியுள்ளார். சேனாவரையர், 'என்புழி', 'சென்றுழி', 'அஃது', 'இஃது', போன்ற சொற்களைக் கையாண்டுள்ளார். அதேபோன்று கல்லாடனாரும், தமதுரையில் 'என்புழி', 'ஏற்புழி', 'கண்டுழி', 'இதனை', 'இதுவும்', 'இவற்றுள்', 'இனி', 'இதனாற் சொல்லியது' போன்ற சொற்களைப் பயன்படுத்தியுள்ளார்.

''கண்டுழி, இஃதன்மை அதற்கும், அஃது அன்மை இதற்கும், அன்மை யாதானும் ஒன்றன்மேல் ஆக்கிக் கொடுப்பினும் அமையும் என்ற கருதற்க'' (கிளவி. நூ. 57, உ.ப. 51)

சேனாவரையர் 'என்புழி', 'அஃது', 'இஃது' என்ற சொற்களை அதிகமாகப் பயன்படுத்தியுள்ளார். கல்லாடனார் 'என்புழி', 'அஃது', 'இஃது' என்பவற்றை பயன்படுத்தியிருந்தாலும் இகரம் கொண்ட சொற்களான 'இனி', 'இவை', 'இதனால்', 'இதனை' போன்ற சொற்களை பெரும்பாலும் பயன்படுத்தியுள்ளார்.

பாடவேறுபாடு

பாடவேறுபாடு சேனாவரையர், கல்லாடனார் ஆகிய இரு உரையாசிரியர்களின் உரையிலும் காணப்படுகின்றன. சேனாவரையர்,

"திரிபுவேறுபடூஉஞ் செய்தியவாகிய வெனவே, வேறுவேறுணர்த்தினல்லது ஒரு சொற் சொல்லுதற்கண் இருதிணையுமுணர்த்தாமை பெறுதும்"

(வினை. நூ.222, உரை. ப. 144)

என்று பாடம் கொள்கின்றார். கல்லாடனார்,

"பிரிபுவேறு படூஉம் செய்தியவாகி
இருதிணைச் சொற்கும் ஓரன்ன உரிமைய"

(வினை. நூ. 224, உரை. ப. 163)

என்று உரை வகுத்துள்ளார். அவ்வுரைப் பகுதிகளில் 'திரிபு வேறுபடூஉம்' என்ற சேனாவரையரின் பாடத்திற்கு 'பிரிபு வேறுபடூஉம்' என்று வேறுபாடம் அமைத்துள்ளார்.

'போலும்' எனும் சொல்லாட்சி

கல்லாடனார் தமதுரையில் 'போலும்' என்ற சொல்லை பெரும்பான்மையும் பயன்படுத்தியுள்ளார். நூற்பாவிற்குரிய பொருளைப் புலப்படுத்தும்போது கல்லாடனார் பல ஆய்வுகளை எடுத்துக் கொண்டு ஆராய்ந்துள்ளார். அவ்வகையில் ஆராயும்வழி தன் மனம் ஏற்றுக் கொள்ளாத அல்லது மறுக்கத் தோன்றுகின்ற இடங்களில் 'போலும்' என்ற சொல்லாட்சியைப் பயன்படுத்தியுள்ளார். இவர் ஏறத்தாழ 40 இடங்களில் கூறியுள்ளார். 'போலும்' என்ற சொல்லை கல்லாடனார் தம் கருத்தைக் கூறுகையில்,

"மக்கள் என்னாது சுட்டென்றது தன் உயர்திணையென இடுகின்ற குறியீட்டிற்குக் காரணம் இதுவென்பது விளக்கல் வேண்டிப்போலும்",

(கிளவி.நூ.1, உரை.ப. 5)

"முன்னும் ஏதுவின் பாகுபாடு ஓதிவைத்துப் பின்னும் ஏது என ஓதியது அவ்வாறொழிய வருவனவற்றைக் கருதிப் போலும்"

(வேற்று. நூ. 12, உரை.ப. 70)

''கிளவி யென்றது ஆகுபெயராற் பொருளினை ஆக்கமொட புணர்ந்ததென்று விசேடித்துக் கூறினமையின் ஆக்கமல்லா ஒது ஒத்த கிழமைத்தன்று என்பது போலும் கருத்து.''

(வே. ம. நூ. 9, உரை. ப. 86)

''மற்று இஃது ஆனென் இறுதி இயற்கையாகும்' என்ற வழியே அடங்காதோ எனின், அளபெடுத்த ஆனென் இறுதியாகலின் வேறு கூறிற்றுப் போலும்''. (வி. ம. நூ. 10, உரை. ப. 111)

கல்லாடனார் 'போலும்' என்ற சொல்லை தயக்கத்தோடு பொருள் கூறுமிடங்களில் பயன்படுத்தியுள்ளார். இத்தகைய 'போலும்' என்ற சொல்லோ, தயக்கத்தோடு பொருள் கொள்ளும் நிலை சேனாவரையர் உரையில் இல்லை எனலாம். சேனாவரையார் சொற்கள் உணர்த்துகிற பொருள்களை நுண்ணிதின் கண்டுணர்ந்து தயக்கமின்றி பொருளைப் புலப்படுத்துகின்றார்.

முடிவுரை

சேனாவரையரின் பொருளைப் புலப்படுத்தும் மொழிநடையினை கல்லாடனாரின் மொழி நடையினோடு ஒப்பிடுகையில் என்பதூஉம், அல்லாதூஉம், என்று அளபெடைச் சொற்களை சேனாவரையர் பயன்படுத்தியிருக்க, கல்லாடனார், கிடந்ததூஉம், வினைவேறுபடூஉம், வேண்டியதூஉம், உயிருடையதூஉம் உயிரல்லதூஉம் என்று பயன்படுத்தியுள்ளார். எனவே கல்லாடனாரிடம் ஒரு வளர்ச்சிப் போக்கு, தம் காலத்திற்கேற்ற எளிமையான தெளிவான நடை காணப்படுகிறதெனலாம்.

இருவர் உரைகளிலும் வடசொற்கள் இருப்பினும் சேனாவரையர் உரையிலேதாம் அவை மிகுந்துள்ளன. கல்லாடனார், போலும் எனும் சொல்லாட்சி மூலம் தயக்கத்தோடு பொருள் உரைக்கின்றார். ஆனால் சேனாவரையர் தயக்கமின்றி பொருளைப் புலப்படுத்துகின்றார்.

அடிக்குறிப்புகள் :

1. கதிர் மகாதேவன், *ஒப்பிலக்கிய நோக்கில் சங்க காலம்,* ப. 18.
2. தி.சு நடராசன், திறனாய்வுக் கலை, ப. 26.
3. ச. வே. சுப்பிரமணியன் (உ. ஆ.), தொல்காப்பியம் தெளிவுரை எச்ச. நூ. 401.

அகநானூற்றில் ஆறுகளும் ஊர்களும்

முனைவர் அ. ஜம்புலிங்கம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

அகத்தே நிகழும் இன்பம் அகப்பொருள் எனப்படும். அகப்பொருள் நூல்கள் பல தமிழில் உள்ளன. ஆயினும் 'அகம்' என்று பெயர் அமைந்த இலக்கியநூல் அகநானூறு ஒன்றுதான். நானூறு அகவற் பாட்டுக்களால் ஆனது. புலவர் பலரால் இயற்றப்பட்டு, மதுரை உப்பூரிகுடிகிழார் மகனார் உருத்திர சன்மரால் தொகுக்கப்பட்டது.

அகநானூறு மூன்று பகுதிகளாக உள்ளது. முதல் நூற்றிருபது பாட்டுக்கள் 'களிற்றியானைநிரை' எனப்படும். அடுத்த நூற்றெண்பது பாட்டுக்கள் 'மணிமிடைப் பவளம்' எனப்படும். கடைசி நூறு பாட்டுக்கள் 'நித்திலக் கோவை' எனப்படும்.

இந்நூலில் அகப்பொருட் செய்திகள் மிகச் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன. அழகிய புனைந்துரைக் காட்சிகளும், வரலாற்றுச் செய்திகளும், பண்பாட்டுக் கூறுகளும் இடம் பெற்றுள்ளன.

சங்க கால மன்னர்களின் வரலாற்றையும், மக்கள் வாழ்க்கையும், யுவனரின் வாணிகத்தையும் அறிய உதவும் மிகச் சிறந்த சான்றுகளாக இப்பாடல்கள் உள்ளன.

கடையெழுவள்ளல்கள், குறுநில மன்னர்கள், பெருநில வேந்தர்கள் பற்றிய செய்திகளும் மிகுதியாகக் காணப்படுகின்றன. நந்தன், மோரியர், ஆரியப் பொருநன் முதலியோர் பற்றிய குறிப்புகளும், பண்டைத் தமிழரின் திருமணம் பற்றிய செய்திகளும் இடம் பெற்றுள்ளன.

சங்ககால ஊராட்சித் தேர்தல், நீதிவழங்கும் திறம், வாணிப முறை முதலியனவும் விளக்கப்பட்டுள்ளன.

அகப்பாடல்கள் நீண்டிருப்பதால் ஒவ்வொரு பாடலிலும் முதல், கரு, உரி ஆகிய முப்பொருளும் ஓவியம்போல் நன்கு விளக்கப்பட்டுள்ளன. பல அரிய உவமைகளும் இதில் எடுத்தாளப்பட்டுள்ளன.

சங்ககால வேந்தர்களின் தலைநகரங்களையும், துறைமுகங்களையும், பேரியாற்றினையும், வரலாற்று நகரங்களையும் கண்டு ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்காகும்.

சேரநாடு, மிகத் தொன்மையான வரலாற்றுப் புகழ்பெற்றது. முடியுடை மூவேந்தரில் முதற்கண் குறிக்கத்தக்கவர்கள் சேர மன்னர்கள். இவர்களின் துறைமுகங்கள் முசிறி, தொண்டி, என்பன.

இத் தொண்டிநகரை,

"திண்டேர்ப் பொறையன் தொண்டி அன்ன"

என்ற குடவாயிற் கீரத்தனார் பாடலால் அறியலாம். 'தொண்டி' பழந்துறைமுகப்பட்டினம். 'துறைமுகம்' என்ற சொல்லுக்கு ஏற்ற பழைய சொல் முன்றுறை ஆகும். இது பொறையனுக்கு உரியதாய் இருந்தது.

தமிழக வரலாற்றில் மிகத் தொன்மையும் வரலாற்றுப் பெருமையும் உடையவர்கள் சேரர்கள். இம்மரபில், 'சேரமான் கருவூர் ஏறிய ஒள்வாள் பெருஞ்சேரல் இரும்பொறை' என்ற அரசன் கருவூரைவென்று அதைத் தலைநகராகக் கொண்டு அரசை நிறுவினான். இவன் உதியஞ்சேரலின் இளவல் என்றும் கருதுவர்.

இரும்பொறையின் தலைநகர் கருவூர் பற்றி,

............குறுகி

ஆள்கோட் பிழையா அஞ்சுவரு தடக்கைக்

கடும்பகட் டியானை நெடுந்தேர்க் கோதை

திருமா வியனகர்க் கருவூர் முன்றுறை" (அகம்:93:18-21)

என்ற கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடலால் அறியலாம்.

சங்ககாலத்தில் சேரநாட்டை ஆண்ட மன்னர்கள் தங்கள் நாட்டைக் குட்டநாடு என்றும் குட நாடென்றும் பிரித்து ஆண்டு வந்தனர்.

கொல்லம் என்ற பகுதியை எல்லையாகக் கொண்டு குட்டுவர் ஆண்டனர். குட்ட நாட்டிற்கு வஞ்சி தலைநகராக விளங்கியது. இவ்வஞ்சி மாநகரை,

.............சினைஇ
ஆரியர் அலறத் தாக்கிப் பேரிசைத்
தொன்று முதிர்வடவரை வணங்குவிற் பொறித்து
வெஞ்சின வேந்தரைப் பிணித்தோன்
வஞ்சி அன்ன'' (அகம் : 396 : 15-19)

என்று பரணர் கூறுவதால் அறியலாம்.

கேரளத்தில் மலப்புர வட்டத்தைச் சேர்ந்த பகுதி ' பொறைநாடு ' என்பதாகும். அதனைச் சேரர் கிளைமரபினர் ஆண்டுவந்தனர். இப்பொறை நாட்டில் குறும்பர் பகுதியில் 'மாந்தரம்' என்றொரு மலைக்குன்றும், அதனைச் சார்ந்து 'மாந்தரம்' என்றொரு நகரமும் இருந்தன. இதனை மாமூலனார்,

''வலம்படு முரசில் சேரலாதன்
முந்நீர் ஒட்டிக் கடம்பறுத் திமயத்து
முன்னோர் மருள வணங்குவிற் பொறித்து
நன்னகர் மாந்தை முற்றத்து ஒன்னார்
பணிதிறை தந்த பாடுசால் நன்கலம்
பொன்செய் பாவை வயிரமொடு ஆம்பல்
ஒன்றுவாய் நிறையக் குவைஇ அன்றவண்
நிலந்தினத் துறந்த நிதியத்து அன்ன
ஒருநாள் ஒருபகல் பெறினும்'' (அகம் : 127 : 3-11)

என்று கூறுவதால் அறியலாம்.

தமிழ்நாட்டை நீர்வளமும் நிலவளமும் பெருகச்செய்து கொழிக்கும் திருநாடாகத் திகழச் செய்த பெருமை சோழர்களுக்கு உரியது. வான் பொய்ப்பினும் தான்பொய்யா மலைத்தலைய கடற்காவிரியின் நீரைக் கல்லணை கட்டித் தேக்கி காடுகொன்று நாடாக்கிக் குளந்தொட்டு வளம்பெருக்கி வேலி ஆயிரம் விளையுள்ளாகச் செய்த சோழர்கள் ஆவூர்,

குடந்தை போன்ற நகரங்களில் சேமித்து வைத்தனர். சங்ககால சோழர்களின் பெரிய நகரமாக விளங்கியது குடந்தை. இதனை,

...வென்வேல்
கொற்றச் சோழர் குடந்தை வைத்த
நாடுதரு நிதியினும் செறிய
அருங்கடிப் படுக்குவள் அறினில் யாயே"

(அகம் : 60 :12-15)

என்று குடவாயிற் கீரத்தனார் குறிப்பிடுகின்றார்.

குடந்தை என்பது குடவாயில் என்பதன் மரூஉ ஆகும். 'குடவாயில்' என்பதனைக் 'கொற்றச் சோழர் குடந்தை வைத்த' எனவும்... மேலையோர் திரித்த வகையானே இக்காலத்தும் திரித்துக் கொள்ளப்படுவன உள" என்றார் பேராசிரியர்.

சங்ககாலச் சோழர்களின் துறைமுகமாகவும் தலைநகராகவும் காவிரியின் கரையில் விளங்கியது புகார் நகரம். காவிரியாற்றின் சிறப்பை,

''மழைமருள் பஃறோல் மாவண் சோழர்
கழைமாய் காவிரிக் கடல்மண்டு பெருந்துறை
இறவோடு வந்து கோதையொடு பெயரும்
பெருங்கட லோதம் போல'' (அகம்:123:11-14)

என்ற காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனார் கூற்றால் அறியலாம்.

சங்ககாலச் சோழர்களில் இணையற்ற வீரமும் தீரமும் பெற்று புலவர் பாடும் பெரும் புகழுக்குரியவனாய்த் திகழ்ந்தவன் கரிகால் வளவன். இவன் நாட்டு நலத்தைரக் காப்பதிலும், நற்றமிழைப் போற்றுவதிலும் தலைசிறந்து விளங்கினான். குமரி முதல் வட இமயம் வரை உள்ள மன்னர்களை வென்று வாகை சூடியவன் இவன்.

வெண்ணிப் பறந்தலையில் சேரனை வெற்றி கொண்டான் கரிகாலன்; அதுகண்ட குறுநில மன்னர்கள் பொறாமை கொண்டனர். ஒன்பது சிற்றரசர்கள் ஒன்றுகூடி கரிகாலனுடன் வீரப்போர் உடற்றினர்;

அவனது வாள் வீச்சிற்கு ஆற்றாது ஒன்பது குடைகளையும் போர்க்களத்தில் போட்டுவிட்டுத் தோற்றோடினர். இதனை,

> *"விரியுளைப் பொலிந்த பரியுடை நன்மான்*
> *வெருதரு தானையொடு வேண்டுபுலத் திறுத்த*
> *பெருவளக் கரிகால் முன்னிலைச் செல்லார்*
> *சூடா வாகைப் பறந்தலை ஆடுபெற*
> *ஒன்பது குடையும் நன்பகல் ஒழித்த*
> *பீடில் மன்னர் போல"* (அகம்: 125:16-21)

என்று பரணர் குறிப்பிடுகின்றார்.

பறந்தலை என்ற சொல் போர்க்களம் என்று பொருள்படும். கலிகொள் யாணர் வெண்ணிப்பறந்தலை என்ற புறநானூற்றுப் பாட்டால் வெண்ணி என்பது நாகைக்கும் தஞ்சைக்கும் இடையே நீடாமங்கலத்துக்கு அருகில் உள்ள ஊர். இப்பொழுது இவ்வூலைக் 'கோயில்வெண்ணி' என்று அழைக்கின்றனர்.

கரிகாலனை வென்று அடக்க எண்ணிய வேளிர்குல அரசர்கள் சேரனையும் பாண்டியனையும் துணையாகக் கொண்டு அழுந்தூர் நோக்கி வந்தனர். கரிகால்வளவன் நால்வகைப் படையுடன் அவர்களை எதிர்கொண்டான்; இதனைப் பரணர்,

> *"காய்சின மொய்ம்பிற் பெரும்பெயர் கரிகால்*
> *ஆர்கலி நறவின் வெண்ணி வாயில்*
> *சீர்கெழு மன்னர் மறலிய ஞாட்பின்*
> *இமிழிசை முரசம் பொருக்ளத் தொழியப்*
> *பதினொரு வேளிரொடு வேந்தர்சாய*
> *மொய்வலி யறுத்த ஞான்றைத்*
> *தொய்யா அழுந்தூர்"* (அகம்: 246:8-14)

என்று குறிப்பிடுகின்றார்.

படைப்புக் காலந்தொட்டு மேம்பட்டுவரும் தொல்குடியினர் பாண்டியர்கள். தமிழ்நிலை பெற்ற தாங்கருமரபினர்; கொற்கை நகரை முத்துக்குளிக்கும் முற்றுறையாகப் பொற்றி வந்தனர்.

இக்கடற்ரை நகரை,
இவர்திரை தந்தஈர்ங் கதிர் முத்தம்
கவர்நடைப் புரவிக் கால்வடுத் தபுக்கும்
நற்றேர் வழுதி கொற்கை முன்துறை''

அகம் : 130 : 9-11)

என்று வெண்கண்ணனார் போற்றிப் புகழ்கின்றார்.

மேலும் இந்நகரை,

''வினைநவில் யானை விறல்போர்ப் பாண்டியன்
புகழ்மலி சிறப்பிற் கொற்கை முன்துறை
அவிர்கதிர் முத்தமொடு வலம்புரி சொரிந்து''

(அகம் : 201 : 3-5)

என்று மாமூலனார் எடுத்துக் காட்டுகின்றார்.

பாண்டிய நாட்டு மறப்போர்ப் பாண்டியர் நாடு காத்தற்கு இடனாகிய அறத்திற் காக்கும் கொற்கைப் பெருந்துறையில் பெறும் முத்துக்கள் பலவாம். இதனை,

.....வடவயின்
வேங்கடம் பயந்த வெண்கோட் டியானை
மறப்போர்ப் பாண்டியர் அறத்திற் காக்கும்
கொற்கையாம் பெருந்துறை முத்தின் அன்ன''

(அகம் : 27 : 6-9)

என்ற மதுரைக் கணக்காயனார் அகநானூற்றுப் பாடலால் கொற்கையில் விளைந்த முத்துக்கள் பற்றி அறிய முடிகிறது.

பாண்டியர்கள் மதுரையைத் தலைநகராகக் கொண்டும் முசிறியைத் துறைமுகமாகக் கொண்டும் தமிழகத்தின் தென்பகுதியைத் தொன்றுதொட்டு ஆண்டுவந்தனர். இதனை,

"கொய்சுவற் புரவிக் கொடித்தேர்ச் செழியன்
முதுநீர் முன்றுறை முசிறி முற்றி" (அகம் 57 : 14, 15)

என்ற நக்கீரர் பாடலால் அறியலாம்.

திருக்கோவிலூருக்கு மேற்கில் பெண்ணையாற்றின் தென்பகுதி தொன்றுதொட்டு மலாடு என்று அழைக்கப் பெற்றுவந்தது. மலையமான்கள் ஆண்ட நாடாதலின் மலையமான் நாடு என்பது 'மலாடு' எனத் திரிந்து வழங்கிற்று. திருக்கோவிலூர் அதன் தலைநகர். அக்கோவிலூரை ஆண்டவன் மலையமான் திருமுடிக் காரி என்ற மன்னன். இவன் கடைஎழு வள்ளவல்களில் ஒருவன்,

இவன் தலைநகரை,

"துஞ்சா முழவின் கோவற் கோமான்
நெடுந்தேர்க் காரி கொடுங்கான் முன்றுறைப்
பெண்ணையம் பேரியாற்று நுண்ணறல்"

(அகம் : 35 ; 14-16)

என்று அம்மூவனார் தம் சுட்டிக்காட்டியுள்ளார்.

பண்டைக் கால அகவாழ்வை விளக்கும் ஒரு காலக் கண்ணாடியாகவும், வரலாற்றுக் கருவூலமாகவும் விளங்கும் அகநானூற்றுப் பாடல்களில் தமிழகத்தின் ஆறுகளும், ஊர்களும் தலைநகரங்களும், துறைமுகங்களும் பல இடம்பெற்றுள்ளன.

திருக்குறளில் ஆமை

ஆறுவிரல் ஐம்பொறி
வீரசோழபுரம்

தமிழ் இலக்கணத்தில் பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி என பகுபத உறுப்புகள் ஆறாகும். விகுதிகள் பலவகைப்படும். ஐம்பால் படர்க்கை விகுதிகள், மூவிடம், ஒருமை, பன்மை விகுதிகள், வியங்கோள் விகுதிகள், பெயரெச்ச விகுதிகள், வினையெச்ச விகுதிகள், தொழிற்பெயர் விகுதிகள் என்பவை அவற்றுள் சிலவாகும்.

தெரிநிலை வினையெச்ச விகுதிகளுள் 'மை' என்னும் விகுதி எதிர்மறைப் பொருளில் மட்டுமே வரும். இதற்கு நடவாமை, உண்ணாமை, சொல்லாமை என்பன சில எடுத்துக்காட்டுகளாகும். இச்சொற்கள் முறையே நடவாதிருத்தல், உண்ணாதிருத்தல், சொல்லாதிருத்தல் என எதிர்மறைப் பொருள்களைத் தருவதுடன் ஆமை என்று முடிவதையும் நோக்குக. இவ்விலக்கணத்தை நன்னூல் 140 ஆம் நூற்பாவின் உரையில் காணலாம்.

இதுபோன்று மை விகுதி பெற்ற சொற்கள் திருக்குறளில் பல இடங்களில் அமைந்துள்ளன. ஒரு குறட்பாவில் நான்கு இடங்களில் மை விகுதி பெற்ற சொற்கள் அமைந்துள்ளன. அக்குறட்பா இதோ,

பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று - குறள். 297.

ஒரு குறட்பாவில் மூன்று இடங்களில் மை விகுதி பெற்ற சொற்கள் அமைந்துள்ளன. அக்குறட்பா இதோ,

நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில் - குறள். 833.

மை விகுதி பெற்ற சொற்கள் அறத்துப்பாலில் 38 இடங்களில் அமைந்துள்ளன. குறள் எண்களின் வழி குறட்பாக்களை அறியவும்.4, 38, 115, 118, 121, 150, 154, 157, 178, 180, 187, 223, 254, 255, 257, 259, 261, 281, 281, 296, 297, 297, 297, 297, 308, 312, 317, 318, 321, 323, 323, 324, 325, 326, 349, 362, 362, 363.

பொருட்பாலில் மை விகுதி பெற்ற சொற்கள் 41 இடங்களில் அமைந்துள்ளன. குறள் எண்களின் வழி அக்குறட்பாக்களை அறியவும். 382, 382, 383, 428, 440, 442, 466, 482, 497, 497, 529, 536, 536, 562, 585, 589, 596, 611, 611, 630, 655, 662, 667, 692, 701, 704, 779, 833, 833, 833, 852, 866, 886, 886, 891, 925, 925, 953, 1050, 1060, 1061.

இன்பத்துப்பாலில் மை விகுதி பெற்ற சொற்கள் 9 இடங்களில் அமைந்துள்ளன. குறள் எண்களின் வழி அக்குறட்பாக்களை அறியவும். 1095, 1110, 1151, 1181, 1190, 1232, 1282, 1295, 1304.

மை விகுதி பெற்ற சொற்கள் அதிகாரத்தின் பெயர்களிலும் 19 இடங்களில் அமைந்துள்ளன. அதிகாரத்தின் எண்களின் வழி அவ்வதிகாரங்களின் பெயர்களை அறியவும். 15, 17, 18, 19, 20, 29, 31, 32, 33, 34, 41, 46, 54, 57, 63, 73, 90, 93, 116.

திருக்குறளில் 107 (38 + 41 + 9 + 19 = 107) இடங்களில் மை விகுதி பெற்று ஆமை என்று முடியும் சொற்கள் அமைந்துள்ளன.

உயிருள்ள ஆமையைத் தெய்வப் புலவர் ஒரு குறட்பாவில் மட்டுமே காட்டியுள்ளார். அக்குறட்பா இதோ,

ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து - குறள். 126.

ஐந்து உறுப்புகளையும் தன் வலிமையான ஓட்டுக்குள் அடக்கி பாதுகாப்பைப் பெறுவதால் ஆமைக்கு உறுப்படக்கி என்ற பெயரும் (அகராதியில்) உண்டு. ஐம்புலன்களையும் அடக்கி புலனடக்குவார் என்ற அருமையான பெயரை நாம் பெறலாமே.

ஆமையின் உடலமைப்பையும், அதன் ஓட்டையும் கூர்ந்து நோக்குங்கள். ஓட்டின் மையப்பகுதி அரைக் கோளத்தின் உச்சியை ஒக்கும். ஆமை ஓட்டின் மையப் பகுதியில் மலை நின்று சுழன்றதாக திருமாலின் கூர்மாவதாரப் புராணம் புகல்கிறது. எனவே ஆமைக்கு கூர்மம் என்ற மற்றொரு பெயரும் உண்டு. கூர்மாவதாரத்தின் வழி ஆமை ஓட்டின் உறுதியும் புலனாகிறது. ஐம்பொறிகளை கூர்மையான உறுதியான அறிவுக்குள் நாம் அடக்கலாமே.

ஆமை நிலத்திலும் நீரிலும் வாழும் இயல்புடையது. ஆமைக்கு நிலத்தில் பாதுகாப்புக் குறைவு. அதனால் அது நீரையே விரும்பி நீரிலேயே வாழும் ஐம்பொறிகளை தீ நெறிக்கண் செலுத்தாது நன்னெறிக்கண் செலுத்தி வாழ்ந்தால் யாண்டும் இடும்பை இல்லாது நிறைந்த பாதுகாப்புடன் நாம் வாழலாமே.

குறட் கடலில் 108 (107 + 1 = 108) ஆமைகள் வாழ்கின்றன. கல்லாமை, அறியாமை, பொறாமை முதலிய தீய ஆமைகளை ஒழித்து கொல்லாமை, வெகுளாமை, கள்ளாமை முதலிய நற்பண்பாமைகளை நமது உள்ள மெனும் கடலில் வாழச் செய்வோமாக.

மதுரை செந்தமிழ்க் கல்லூரி முப்பெரும் விழா வாழ்த்துப் பா

வீரமிக்க சீமையாம் இராமநாதபுரம்
பொன்னுசாமித்தேவர், மன்னர் பாஸ்கர சேதுபதி
தலைமுறையாய் வந்தவர்தாம்
வள்ளல் பாண்டித்துரை தேவராவார்

தந்தை அறநெறி போல் தானும்
தப்பாது, தவறாது அறநெறி வழிதனில் நாடும்
முதல் தமிழ்ச்சங்கம், இரண்டாம் தமிழ்ச்சங்கம்
மூன்றாம் தமிழ்ச்சங்கம் முடிவுற்றாயினும்

மதுரையம்பதியில் இனி தமிழ்வளர்க்குமா?
எனும் ஐயம் கொண்டார் தமிழ் மக்கள்
தலை தாழா தமிழன் வள்ளல் பாண்டித்துரை தேவர்
நானே உளன் எந்தை தமிழுக்குச் சங்கம்

அமைப்பேன் என்றுரைத்தே
சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை
பாண்டியன் புத்தக சாலை
தமிழ்நூல் ஆராய்ச்சி சாலை நிறுவி
காவடிச்சிந்துவை இயற்றி
பாவடிச் சந்துகளில் பரப்பியவர்

நான்காம் தமிழ்ச் சங்கம் கண்ட
நாவலர், சங்கத்தமிழ்க் காவலர்
என்றும் நன்றியுள்ளார் தமிழ்ச்
சான்றோர் அவரினை எண்ணி போற்றியே

தமிழ் வளர்ப்பார் அவனியிலே
வள்ளல் பாண்டித்துரை தேவரினத்து
தேவரில்லை தமிழர் இனத்து தேவராய்
விளங்கி வருகிறார், நன்றேயாம்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்

ஒருவர் நிலவுலத்தில் முறைப்படி வாழ்வாராயின் அவர் மனிதனேயானாலும், வானுலகத்தில் வாழ்கின்ற தேவருள் ஒருவராக மதிக்கப்படுவார், எனும் திருக்குறள் வழி நடந்தார்.

தமிழன்புடன்
கூலவாணிகர் இரா.சொ. இராமசாமி
பொதுச்செயலாளர்
தமிழ்நாடு தமிழ்ச்சங்கத்தின் கூட்டமைப்பு
தலைவர், கோவை முத்தமிழ் அரங்கம்
கோவை – 45.
கைபேசி : 9994954547

இளைஞர்களே விழிமின்

கவிவேந்தர் கா. வேழவேந்தன்

இளைஞர்களே! இளைஞர்களே! நாளை ஏட்டை
எழுதவந்த 'கனவுக'ளே! குலுங்கப் போகும்
விளைச்சலுக்கே 'நாற்றங்கால்'நீங்கள்! நல்ல
விஞ்ஞான விடியலுக்கே 'வெள்ளி'நீங்கள்!
களைபோன்றே கிளைத்திருக்கும் சாதி பேதக்
கசடுகளை எரிக்கவந்த 'பிழம்'பே நீங்கள்!
தளையறுத்துக் கிளம்புங்கள்! புதுமை பூத்த
சமத்துவச்சீர்ச் சமுதாயம் படைத்தி டுங்கள்!

பாட்டனுக்கும் முப்பாட்டன் விமான மேறிப்
பறந்தானா? ஒலி, ஒளிகள் காற்றில் வந்து,
பாட்டாக, வண்ணவண்ணப் படங்க ளாகப்
பரவசத்தைக் குவிக்கமென்று நினைத்திட்டானா?
காட்டினிலே விலங்கோடு விலங்காய் வாழ்ந்தோன்
கடும்உழைப்பால், சிந்தனையால் உயர்ந்தான்! நாமும்
நாட்டினிலே 'எடிச'னைப்போல், 'கியூரி' யைப்போல்
நல்லபல புதுமைகளைக் காண வேண்டும்!

பறக்கின்ற சிட்டுகளோ, கடலின் மீனோ
பசியாலே செத்ததென்ற சேதி உண்டா?
இறக்கின்றான் உணவின்றி மனிதன் மட்டும்!
ஏன் இன்னும் இழிநிலைமை? மண்ணின் மீது
திறத்தோடும் உரத்தோடும் பாடு பட்டுச்
செம்மாந்த வாழ்க்கைநலம் பெறுதல் வேண்டும்!
வெறிப்பேதச் சாதிமத மடமைப் பேயை
வெடிவைத்துப் பொடிப்பொடியாய்த் தகர்க்க வேண்டும்!

சிந்தனையைப் போற்றுங்கள்! அறிவுப் போக்கின்
திசைக்குவிழி மாற்றுங்கள்! சோம்பித் தூங்கும்
மந்தநிலை தூற்றுங்கள்! சிலிர்த்தெ ழுந்தே
மாப்பணிகள் ஆற்றுங்கள்! பாசம் என்னும்
பந்தநன்னீர் ஊற்றுங்கள்! நலிந்து தேய்ந்தோர்
துயர்துடைத்துத் தேற்றுங்கள்! படைப்பில் எல்லாம்
சொந்தமென்றே சாற்றுங்கள்! வெற்றி யூரின்
சுடர்க்கொடியை ஏற்றுங்கள்! எழுக இன்றே!

வாசகர் வாசகம் ①

மதிப்பிற் சிறந்த பெருந்தகையீர்,

வணக்கம். நலமே விழைவு. ஆண்டின் முதல் செந்தமிழ் இதழே, நவரத்தினப் பதக்கம் போல் 9 நல் கட்டுரைகளை ஏந்தி வந்தது.

உடல் நலம் கூட்டும் ஆறு ஆதாரம் போல, அறுசுவைத் தமிழ்விருந்து படைத்தார் முனைவர் ரா. விசயராகவனார். பாராட்டுக்கள் !

வாசகர் கருத்து வரவேற்பால், இதழ் மணம் மேலும் கூடுகிறது !

நன்றி !

அன்பு ஏற்றுக் கொள்ளுங்கள்.

இங்ஙனம்,

புலவர் சி. பாண்டுரங்கன்
ஆம்பூர்

②

அன்பார்ந்த ஐயா,

வணக்கம். கவிதைகள் ஏந்தி செந்தமிழ் மணக்கிறது. அதனால் இலக்கிய இலக்கண கடமையுணர்வோடு இதனையும் அனுப்பியுள்ளேன்.

தாங்கள் தமிழ்த்தொண்டு தழைக்க என்றும் விரும்புகிறேன்.

அன்புசால்

அரசக்கண்ணன்
தஞ்சாவூர்

ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி பி.ஏ.,

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. சுப. அண்ணாமலை

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா

தொடர்பு முகவரி

ஆசிரியர்

செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை
மதுரை - 625 001
தொலைபேசி : 0452 - 6575615

பதிப்பாசிரியர் : **இரா. அழகுமலை,** எம்.ஏ., எம்.ஃபில்.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை – 1
தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : **தவம் பிரிண்டர்ஸ், 32,** மேலமாசி வீதி, மதுரை – 1

RNI Regd. No. 5508/57 May 2011 MA/130/2011-2013
Posted at Madurai BPC on 25th of every month

செந்தமிழ்க் கல்லூரி

மதுரைத் தமிழ்ச் சங்கம்

[தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது]

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை – 625 001 ✆ 0452 - 2343707, நிகரி : 0452 - 4373475

2011 - 2012ஆம் ஆண்டிற்கான சேர்க்கை நடைபெறுகிறது

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

நன்கொடை கிடையாது

சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன

இரா. அழகுமலை	முனைவர் சி. விஜயன்	இரா. குருசாமி
செயலாளர்	முதல்வர் (பொறுப்பு)	செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம்	செந்தமிழ்க் கல்லூரி	செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,	From
செயலாளர் மதுரைத் தமிழ்ச் சங்கம் மதுரை – 625 001	**SECRETARY** Madurai Tamilsangam Madurai - 625 001 TAMILNADU, S. INDIA

பெறுநர் / To

திருமிகு.இரா.அழகுமலை
எம்.ஏ.,எம்.பில்., அவர்கள்,
21-A முத்துராமலிங்கத் தேவர் தெரு,
கோச்சடை,
மதுரை 625 010.

Printed by V. Govindarajan, published by R. ALAGUMALAI M.A., M.Phil. on behalf of Madurai Tamil Sangam, Madurai and printed at Davam Printers, 32, West Masi Street, Madurai - 1, and published at 54, Tamil Sangam Road, Madurai. Editor R. ALAGUMALAI M.A., M.Phil.